


16. 09. 2025

தலைப்பு செய்திகள்

- போதை பொருட்களை ஒழிப்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு உறுதியுடன் செயலாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசவுள்ளார்.
- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் 146 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்துள்ளார்.
- ஆசிரியர் தகுதி தேர்வு தீர்ப்பின் மீது தமிழக அரசு மறுசீராய்வு மனுதாக்கல் செய்துள்ளதாக மாநில பள்ளிக்கல்வி துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.
- சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் கலப்பு இரட்டையர் முதல்சுற்றில் ரோஹன்கபூர், Ruthvika Shivani இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டிலிருந்து போதை பொருட்களை முழுமையாக அகற்றுவதை நோக்கமாக கொண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு உறுதியுடன் செயலாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் போதைப்பொருள் தடுப்பு படையின் இரண்டாவது தேசிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர் இந்த 2 நாள் மாநாடு,போதை பொருள்

இல்லா இந்தியாவை உருவாக்குவதற்கான நடைமுறைகள் குறித்து ஆராயப்படும் என்றார்.

நாட்டின் 372 மாவட்டங்களில் போதை பொருள் இல்லா இந்தியா இயக்கம் செயல்படுவதாகவும், 10 கோடி மக்களும், 3 லட்சம் கல்வி நிறுவனங்களும் இதில் பங்கேற்றுள்ளதாகவும் கூறினார்.

அனைத்து மாவட்டங்களிலும் இத்தகைய பிரச்சாரம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த அமைச்சர், மத்திய மாநில அரசுகளின் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயலாற்றினால் மட்டுமே போதை பொருள் புழக்கத்திற்கு எதிரான போராட்டம் வெற்றிபெறும் என்றார்.

இந்நிகழ்வில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான 2024-ம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையை வெளியிட்ட திரு.அமித்ஷா, இதற்கான இணையதள பிரச்சாரத்தையும் துவக்கிவைத்தார்.

இந்த மாநாட்டில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது, அதற்கான தொடர்புகளை அகற்றி செயலாற்றுவது குறித்து 8 அமர்வுகளில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த தீர்மானம் பொறுப்புணர்வுடன் கூடிய பங்களிப்பு! என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை இந்தியா வந்துள்ள மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசுகிறார்.

முன்னதாக இன்றுகாலை புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திலும், முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து பேசினார்.

டாக்டர்.ராம்கூலம் புதுதில்லியில் உள்ள புதிய நாடாளுமன்ற கட்டடத்தை இன்று பிற்பகல் பார்வையிடுகிறார்.

டாக்டர். ராம்கூலத்தின் 8 நாள் இந்திய பயணம் இன்றுடன் நிறைவடைகிறது.

❖❖❖❖❖❖

பிரதமர்

ஃபீடே மகளிர் செஸ் போட்டியில் இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற இந்திய வீராங்கனை வைஷாலி மற்றும் சீனாவில் நடைபெற்ற Speed ஸ்கேட்டிங் ஆயிரம் மீட்டர் Sprint போட்டியில் தங்க பதக்கத்தை வென்ற ஆனந்த்குமார், வேல்குமாருக்கும் பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வைஷாலியின் அர்ப்பணிப்புமிகு செயல் திறனை பாராட்டிய பிரதமர், ஆனந்த் குமாரின் வேகமும், விளையாட்டு உணர்வும், நாட்டின் முதல் உலக ஸ்கேட்டிங் சாம்பியன் பட்டத்தை பெற்று தந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

இவ்விருவருக்கும் வாழ்த்து தெரிவித்த மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷாவும், திரு. ராஜ்நாத் சிங்கும் செஸ் போட்டிகளில் இந்தியாவில் தொடரும் ஆதிக்கத்தை வைஷாலியின் வெற்றி பறைசாற்றுவதாகவும்,

வேல்குமாரின் வெற்றி எண்ணற்ற இளையோருக்கு உத்வேகமாகவும், உந்துசக்தியாகவும் திகழும் என்றும் கூறியுள்ளனர்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினும் இவ்விருவரின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

வினய்மோகன்

நாசா மற்றும் இஸ்ரோ இடையிலான நீடித்த நட்புறவு மற்றும் விண்வெளித்துறையின் பங்களிப்பு போன்றவை இந்திய அமெரிக்க ஒத்துழைப்பில் முக்கிய அங்கமாக திகழ்வதாக அமெரிக்காவிற்கான இந்திய தூதர் திரு. வினய்மோகன் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் இருநாடுகளின் விண்வெளி கூட்டமைப்பு நிகழ்வில் உரையாற்றிய அவர், சந்திரயான் நிசார் விண்வெளித் திட்டங்களில் இருநாடுகளிடையே காணப்பட்ட ஒருங்கிணைப்பை சுட்டிக்காட்டினார்.

2028, 2035-ம் ஆண்டுகளுக்கிடையே நிலவிற்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் விண்வெளி திட்டத்தில் நாசாவும் முக்கிய பங்களிப்பு நாடாக திகழும் என்றார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

❖❖❖❖❖❖

நாமக்கல்

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவிப்பிற்கு ஏற்ப அடுத்த தலைமுறையினருக்காக சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் நிலையில் வேளாண் உபகரணங்களுக்கான வரி 5 சதகிவிதமாக குறைக்கப்படுவதால் விவசாய பணிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும் என்று நாமக்கல், ராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகள் மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் 146 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புதிய தொழிற்பேட்டைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பொதுவசதி மையத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை தலைமைசெயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் தொடங்கிவைத்தார்.

18 தொழிற்பேட்டைகளின் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு பணிகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக தமிழ்நாடு கைத்தறி தொழில் வளர்ச்சிக்கழகத்தின் சார்பில் 65 வயதிற்கு மேற்பட்ட 7 சிறந்த கைவினைஞர்களுக்கு கைவினை பொக்கிஷ விருதுகளையும், பங்களிப்பு, திறன் மற்றும் படைப்புகளில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

பிரான்ஸ் நாட்டுடன் கலாச்சார பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் முதலமைச்சர் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

வக்.ஃப் வாரியத்தின் சார்பில் இஸ்லாமிய மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகையையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில், நடப்பாண்டு முதற்கட்டமாக 31 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

உதகையில் தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி உருது உயர்நிலைப்பள்ளியை இன்று திறந்துவைத்து பேசியஅவர், விரைவில் பள்ளிக்கு தேவையான வகுப்பறைகள் கட்டவும், ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆசிரியர் தகுதி தேர்வு கட்டாயம் என்ற உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின்மீது, தமிழக அரசு மறுசீராய்வுமனு தாக்கல் செய்துள்ளதாக கூறிய அவர், இம்மனு மீது வரும் 19ம் தேதி வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

மூர்த்தி

மதுரை வடக்குவட்டம் சிறுதூரில் மின் தொடரமைப்பு கழகம் சார்பில் 110 கிலோவாட் துணைமின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி இன்று துவக்கி வைத்தார்.

தொடர்ந்து திண்டியூர் ஊராட்சியில் ஈச்சநெறி கண்மாய் வரத்து கால்வாயில் 2 கோடியே 31 லட்சரூபாய் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைப்பதற்கான பணிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 20-ம் தேதிவரை கடலுக்குள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் கலப்பு இரட்டையர் முதல்சுற்றில் ரோஹன்கபூர், Ruthvika Shivani இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖